ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1985/38 - 2016 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.09.23

*1985/38 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 61.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கட்டிடத் தொழிலில் பயன்படுத்தப்படும் வர்ணப்பூச்சுக்களினதும், வார்னிஷ்களினதும், கரைப்பான்களினதும் எல்லா உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் அதன் போத்தல்களில், பொதிகளில் அல்லது கொள்கலன்களின் மீது தெளிவாக பின்வருவனவற்றை குறித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

(அ) தொகுதி இலக்கம் ;
(ஆ) உற்பத்தித் திகதி ;
(இ) சிறந்த பாவனைக்கான கடைசித் திகதி ;
(ஈ) கொள்ளளவு ;
(உ) ஆகக்கூடிய சில்லறை விலை.

(ஊ) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் பிரசுரிக்கப்பட்ட 36 ஆம் இலக்க பணிப்புரை, வர்த்தமானி அறிவித்தல் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிய இல. 1725/30 இல் குறிப்பிடப்பட்ட ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க காரியத்தின் நியம (செறிவு) அளவுக்கு மேற்படாது உள்ளதாக உறுதி செய்யப்படல் வேண்டும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதிய, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரை இல. 50ஐ, இப்பணிப்புரை மூலம் இரத்துச் செய்கின்றது.

இப்பணிப்புரை 2017, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரட்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2016, செத்தெம்பர் 22.

10- 193



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.